
# 3 சின்னத்தம்பிப் புலவர்



ஒரு நாள் மாலை நேரத்தில், சிறுவர்கள் சிலர் ஓரிடத்திலே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியில் வந்த தமிழ்ப் புலவர் ஒருவர், அச்சிறுவர்களைப்பார்த்து ''சிறுவர்களே! இவ்வூரில் வதியும் வில்லவராய முதலியாரின் இல்லம் எங்குள்ளது?'' என்று கேட்டார். அச்சமயம் சிறுவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அப்பொழுது அச்சிறுவர்களில் ஒருவன்,

''பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்
நன்பூதலத் தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்'' என்று பாட்டாக அதற்கு விடை கூறினான். அதனைக் கேட்ட புலவர் திகைத்தார்; சிறுவனை ஏற இறங்கப் பார்த்தார்; மகிழ்ச்சியால் அவனைப் பாராட்டினார். பின்னர் அவன் சொன்ன குறிப்பின் மூலம் வில்லவராய முதலியார் வீட்டை அடைந்தார்.

வில்லவராய முதலியாரது வீட்டிலே அவரோடு அளவளாவிய தமிழ்ப் புலவர், வழியில் நடந்த அந்தச் சம்பவத்தைக் கூறி அந்தச் சிறுவனின் தோற்றம், உயரம், வயது முதலியவற்றையும் தெரிவித்தார். அவன் தன் மகனாகவே இருக்க வேண்டும் என்று முதலியார் கூறினார். சிறிது நேரத்தின்பின் அச்சிறுவன் அங்கே வருவதைக் கண்ட தமிழ்ப்புலவர், இவனே அச்சிறுவன். இவனால் தமிழ்மொழி மேலும் சிறப்படையும் என்று கூறி அச்சிறுவனது பெயரைக் கேட்டார். சிறுவன் அடக்கமாக, சின்னத்தம்பி என்று விடை பகர்ந்தான். சின்னத்தம்பியே பின்னர் சின்னத் தம்பிப் புலவர் எனப் பலராலும் பாராட்டப்பெற்ற ஈழநாட்டின் பெரும் புலவர் ஆவார்.



வில்லவராய முதலியார் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஏறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரும் பிரபுவும் தமிழ்ப் புலவரும் ஆவார். அவருடைய புதல்வரே சின்னத்தம்பிப் புலவர். இவர் இளமையிலேயே கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார்.

வில்லவராய முதலியார் பொழுதுபோக்காகக் கவிகள் பாடுவார். ஒரு நாள் அவர் ஒரு பாடலின் முதல் மூன்று வரிகளையும் ஓர் ஏட்டில் எழுதி நான்காவது வரியை எழுத முயன்றார். அது அவருக்குச் சங்கடமாயிருக்கவே, அதனை அவர் அங்கேயே வைத்து விட்டுத் தமது

வேலையாகச் சென்று விட்டார். பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது அந்தப் பாடல் மிகவும் சிறப்பாகப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். மிகவும் ஆச்சரியம் அடைந்து ''இந்த ஏட்டில் எழுதியவர் யார்?'' என்று மனைவியாரைக் கேட்டார். மனைவியார், ''நம்முடைய புதல்வன் சின்னத்தம்பியே ஏதோ எழுதினான்'' என்று கூறினார். அதைக் கேட்ட முதலியார் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து மகனைப் பாராட்டினார். இதனாலேயே, தமிழ்ப் புலவர் ''பொன்பூச் சொரியும்...'' என்ற பாடலால் விடை கூறிய சிறுவனைப் பற்றிக் கூறிய போது அவன் தம்முடைய மகனாகவே இருக்கவேண்டும் என்று கூறினார்.

சின்னத்தம்பிப் புலவர் கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, கரவை வேலன்கோவை, பறாளைவிநாயகர்பள்ளு என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

## அகராதிப் பயன்பாடு




| | |
|---|---|
| சம்பவம் | - |
| சங்கடம் | - |
| அதிசயம் | - |
| அளவளாவுதல் | - |
| ஏடு | - |
| பள்ளு | - |

**பயிற்சி**

## 3.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சின்னத்தம்பிப் புலவர் வாழ்ந்த ஊர் எது?
2. தமிழ்ப் புலவர் சிறுவர்களிடம் யாருடைய வீட்டினைப் பற்றி விசாரித்தார்?
3. வீட்டின் அடையாளத்தைக் கண்டறிய சிறுவன் கூறிய மரம் எது?
4. சின்னத்தம்பிப் புலவர் எப்பராயத்திலிருந்து கவிபாடும் வல்லமையைப் பெற்றிருந்தார்?
5. சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்கள் இரண்டினை எழுதுக.

## பால்

பால் என்றால் பிரிவு என்று பொருள். பால் ஐந்து வகைப்படும்.

1) ஆண்பால்
2) பெண்பால்
3) பலர்பால்
4) ஒன்றன்பால்
5) பலவின்பால்

### ஆண்பால்

உயர்திணைப் பொருள்களில் ஆண் ஒருவரைக் குறிப்பது ஆண்பால் எனப்படும். உதாரணம்: அரசன், செழியன்

### பெண்பால்

உயர்திணைப் பொருள்களில் பெண் ஒருவரைக் குறிப்பது பெண்பால் எனப்படும். உதாரணம்: யாழினி, உழத்தி

### பலர்பால்

உயர்திணையில் பலரைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

உதாரணம்: மக்கள், ஆண்கள், பெண்கள்

### ஒன்றன்பால்

அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும். உதாரணம்: கல், மரம்

### பலவின்பால்

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும். உதாரணம்: அவை, வீடுகள், மாடுகள்

### இருபால் பொதுப்பெயர்

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இருபால் பொதுப்பெயர்கள் எனப்படும்.

உதாரணம்: கவிஞர், அதிபர், நீதிபதி, சனாதிபதி

## 3.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. வீடு | - | ____________ | ii. சந்தோசம் | - | ____________ |
| iii. மகன் | - | ____________ | iv. கவிஞர் | - | ____________ |
| v. பனுவல் | - | ____________ | vi. மட்டற்ற | - | ____________ |
| vii. கவி | - | ____________ | viii. தாரம் | - | ____________ |

## 3.3

### (அ) ஒத்தகருத்துச்சொல்லின் கீழ் கோடிடுவோம்.

i. வீடு - (மடம் / இடம் / மனை)
ii. பாதை - (ஓரம் / வீதி / பேதை)
iii. உணவு - (ஆரம் / ஆகாரம் / அகரம்)
iv. புத்தகம் - (வர்த்தகம் / பனுவல் / அகம்)
v. அரவம் - (பாம்பு / சாந்தம் / சனம்)
vi. வானம் - (வனம் / விண்ணகம் / மண்ணகம்)
vii. அரை - (பரை / மரை / பாதி)
viii. கல்வி - (மலை / வித்தை / செல்வம்)

### (ஆ) எதிர்க்கருத்துச் சொற்களை இணைப்போம்.


| | |
|---|---|
| i. மாரி | அ) தோல்வி |
| ii. இலாபம் | ஆ) அழிவு |
| iii. வரவு | இ) மறுமை |
| iv. இன்பம் | ஈ) அநாகரிகம் |
| v. வெற்றி | உ) செலவு |
| vi. நாகரிகம் | ஊ) கோடை |
| vii. ஆக்கம் | எ) நட்டம் |
| viii. இம்மை | ஏ) துன்பம் |

## 3.4

### (அ) பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவோம்.

| | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|---|
| உ+ம் | ஓடினான் | ஓடினாள் | ஓடினார்கள் | ஓடியது | ஓடின |
| 1 | ................ | விழுந்தாள் | .................. | ................ | ................... |
| 2 | ................ | ................... | .................. | உண்டது | ................... |
| 3 | ................ | ................... | குளிக்கின்றனர் | ................ | ................... |
| 4 | வருகிறான் | ................... | ................. | ................. | ................... |
| 5 | ................. | ................... | .................. | ................. | நடந்தன |

### (ஆ) எதிர்ப்பாற் சொற்களைத் தெரிந்து எழுதுவோம்.




1. அரசன் ..................
2. பாலகி ..................
3. மாணவன் ..................
4. உழத்தி ..................
5. வீரன் ..................
6. இளைஞன் ..................
7. வேடன் ..................
8. குறவன் ..................
9. விதவை ..................
10. இடையன் ..................

## 3.5

**(அ) கீழ்வரும் சொற்களுள் பொதுப் பெயர்ச் சொற்களைத் தெரிந்து அவற்றுக்குரிய கட்டங்களை நிழற்றுவோம்.**

| | | | |
|---|---|---|---|
| அம்மா ☐ | குழந்தை ☐ | அதிபர் ☐ | |
| விஞ்ஞானி ☐ | நிருபர் ☐ | நீதிபதி ☐ | பாட்டி ☐ |
| மேதை ☐ | ஆசிரியன் ☐ | வியாபாரி ☐ | |

**(ஆ) பின்வரும் பந்தியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடத்திற்கு பொருத்தமான விடைகளை தெரிவு செய்து கட்டமிடுவோம்.**

ஓர் அடர்ந்த காட்டில்  வாழ்ந்து வந்தது. அதனுடன்  நண்பனாக இருந்தது. ஒரு நாள் அவை காட்டு வழியே நடந்து செல்லும் போது சில  கண்டன.

1. i. ஆந்தைக்கு    ii. ஓர் ஆந்தை    iii. ஆந்தையை
2. i. ஒரு நரி    ii. நரியின்    iii. நரிகளோடு
3. i. எறும்புகளோடு    ii. எறும்புகளால்    iii. எறும்புகளைக்

## 3.6 தரப்பட்ட பழமொழிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுவோம்.

1. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
2. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3. ஆழமறியாமல் காலை விடாதே
4. தாயிற் சிறந்த கோயிலுமில்லை.